TNKR080004062021

**சார்பு நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை :– திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ.,பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9–ம் நாள் திங்கட்கிழமை**

**அசல் வழக்கு எண்.159/2021**

**CNR NO.TNKR08-000406-2021**

கனரா வங்கி, பணிக்கம்பட்டி கிளை
சார்பாக அதன் கிளை மேலாளர் ... வாதி

.... எதிர் .....

ரெங்கராஜ் ... பிரதிவாதி

**தீர்ப்புரை**

வாதியின் வங்கியிடமிருந்து பிரதிவாதி பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.8,59,905/–ஐ பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி வாதி வங்கியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*(Amended as per order in IA 1/2024, Dated : 24.03.2025)

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 18.08.2021 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 02.03.2026 |
| தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 09.03.2026 |
| வாதிக்காக | : | திரு.C.செல்வகுமார் – வழக்கறிஞர் |
| பிரதிவாதி | : | பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார். |

**1) திருத்தப்பட்ட பிராதின் சுருக்கம் :–**

வாதியின் வங்கியிடம் பிரதிவாதியானவர் கடந்த 04.12.2007–ம் தேதி அன்று விவசாய நிலத்தில் பைப்லைன் போடுவதற்காக கடன் கேட்க, மேற்படி பிரதிவாதியின் ஆவணங்களை பரிசீலனை செய்து, அன்றைய தினமே பிரதிவாதிக்கு ரூ.1,70,000/–ம் கடனாக கொடுக்க, மேற்படி கடன் தொகைக்காக பிரதிவாதியானவர் ஆவணங்கள்

பிறப்பித்துக்கொடுத்து கடன் தொகையை பெற்றுக்கொண்டுள்ளார். பின்னிட்டு, மீண்டும் பிரதிவாதியானவர் வாதி வங்கியிடம் சூரியகாந்தி சாகுபடி செய்ய வேண்டி கடந்த 29.01.2008–ம் தேதி அன்று கடன் கேட்க, அன்றைய தினமே பிரதிவாதிக்கு ரூ.50,000/– கடனாக கொடுக்க, மேற்படி கடன் தொகைக்காக பிரதிவாதியானவர் ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்து மேற்படி கடன் தொகையை பெற்றுக்கொண்டுள்ளார். பிரதிவாதியானவர் மேற்படி கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை என்பதால், வாதியின் வங்கியிலிருந்து பிரதிவாதியை தொடர்பு கொண்டு, பிரதிவாதி பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்த கோரி கேட்க, மேற்படி பிரதிவாதி கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை. எனவே, வாதியின் வங்கியிடம் இருந்து பிரதிவாதி பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.8,59,905/–ஐ பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

3) வாதி வங்கி தரப்பில், வங்கியின் உதவி மேலாளர் செல்வகுமார் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளதால், வாதி வங்கி கோரியுள்ள பரிகாரம் வாதி வங்கிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

5) **தீர்வு :–**

5 (1) வா.சா.1 அவரது முதல் விசாரணையில், வாதியின் வங்கியிடம் பிரதிவாதியானவர் கடந்த 04.12.2007–ம் தேதி அன்று விவசாய நிலத்தில் பைப்லைன் போடுவதற்காக கடன் கேட்க, மேற்படி பிரதிவாதியின் ஆவணங்களை பரிசீலனை செய்து, அன்றைய தினமே பிரதிவாதிக்கு ரூ.1,70,000/–ம் கடனாக கொடுக்க, மேற்படி கடன் தொகைக்காக பிரதிவாதியானவர் ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்து கடன் தொகையை பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், பின்னிட்டு, மீண்டும் பிரதிவாதியானவர்

வாதி வங்கியிடம் சூரியகாந்தி சாகுபடி செய்ய வேண்டி கடந்த 29.01.2008–ம் தேதி அன்று கடன் கேட்க, அன்றைய தினமே பிரதிவாதிக்கு ரூ.50,000/– கடனாக கொடுக்க, மேற்படி கடன் தொகைக்காக பிரதிவாதியானவர் ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்து மேற்படி கடன் தொகையை பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், பிரதிவாதியானவர் மேற்படி கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை என்பதால், வாதியின் வங்கியிலிருந்து பிரதிவாதியை தொடர்பு கொண்டு, பிரதிவாதி பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்த கோரி கேட்க, மேற்படி பிரதிவாதி கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை என்றும், எனவே, வாதியின் வங்கியிடம் இருந்து பிரதிவாதி பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.8,59,905/–ஐ பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

5 (2) வாதியின் வங்கியிடம் பிரதிவாதியானவர் இரண்டு தவணைகளாக கடன் வாங்கியுள்ளார் என்கிற சங்கதியையும், அதற்காக பிரதிவாதியானவர் ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்கிற சங்கதியையும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாதது அவருக்கு எதிரான அனுமானத்தை உருவாக்குகிறது. வாதியின் வங்கியிடம் பிரதிவாதியானவர் கடன் பெற்றுக்கொண்டு, அதற்காக ஆவணங்கள் பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்கிற சங்கதியை வா.சா.1–ன் வாய்மொழி சாட்சியத்தின் வாயிலாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் வாயிலாகவும் வாதி நிரூபணம் செய்துள்ளதால், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

**6) முடிவாக,**

**(அ)** வாதியின் வழக்கானது செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**(ஆ)** பிரதிவாதியானவர் வாதியின் வங்கிக்கு செலுத்த வேண்டிய தாவா தொகை ரூ.8,59,905/–ம் மற்றும் அசல் கடன் தொகை ரூ.2,20,000/–க்கு தாவா தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வருட வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் காலம் வரையிலான காலத்திற்கு 6% வருட வட்டியும் இரண்டு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 9–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.09 15:21:45 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**வாதி தரப்பு சாட்சி :–**

வா.சா.1 – செல்வகுமார் (வாதி வங்கியின் உதவி மேலாளர்)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | கடன் விண்ணப்பம் |
| வா.சா.ஆ.2 | கொதுவை ஒப்பந்தம் |
| வா.சா.ஆ.3 | உயிர்பிப்பு கடிதம் |
| வா.சா.ஆ.4 | உயிர்பிப்பு கடிதம் |
| வா.சா.ஆ.5 | உயிர்பிப்பு கடிதம் |
| வா.சா.ஆ.6 | உயிர்பிப்பு கடிதம் |
| வா.சா.ஆ.7 | கடன் விண்ணப்பம் |
| வா.சா.ஆ.8 | கொதுவை ஒப்பந்தம் |
| வா.சா.ஆ.9 | உயிர்பிப்பு கடிதம் |
| வா.சா.ஆ.10 | உயிர்பிப்பு கடிதம் |
| வா.சா.ஆ.11 | உயிர்பிப்பு கடிதம் |
| வா.சா.ஆ.12 | உயிர்பிப்பு கடிதம் |
| வா.சா.ஆ.13 | கணக்கு பட்டியல் |
| வா.சா.ஆ.14 | கணக்கு பட்டியல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.09 15:21:49 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.